(இ) இல்லையெனில், அந்த ஆணைகளை விரைவில் செயல்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: (*a*) No.

(*b*) Draft amendments to the Tamil Nadu State Judicial Service Rules have been received from the High Court, for approval. They are under the consideration of the Government.

திரு. க. அறிவழகன்: நீதித் துறையில் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் சில இடங்களில் இருக்கிறார்கள். சில இடங்களில் சிவில் வழக்குகளும், கிரிமினல் வழக்குகளும் இருக்கின்றன. ஆனால் இவர்கள் சிவில் வழக்குகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் நிலையும், கிரிமினல் வழக்குகளை எடுத்துக்கொள்ள முடியாத நிலையும் இருக்கிறது. அதனால் பொது மக்கள் கிரிமினல் வழக்குகள் காரணமாக திருப்பத்தூரிலிருந்து வேலூருக்கும், பல்வேறு ஊர்களிலிருந்து வேறு ஊர்களுக்கும் செல்லும் நிலையில் இருக்கிறார்கள். எனவே எல்லா மாஜிஸ்டிரேட்டுகளும் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதற்கான யோசனை அரசிடம் இருக்கிறதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: No such matter is under the consideration of the Government.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(1) பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி அரசு விடுமுறை குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிற சூழ்நிலையில் சென்னை மாவட்டத்திற்கும், கோவை மாவட்டத்திற்கும் 18 ஆம் தேதி அரசு விடுமுறை என்று அறிவித்திருக்கிறது. பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு முழுவதற்கும் சொந்தக்காரர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 செப்டம்பர் 12] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

எனவே இந்த இரண்டு மாவட்டங்களுக்கு மட்டும் விடுமுறை என்று விடுவதைவிட, மாநில அளவிலே விடுமுறை விட அரசு முடிவெடுத்து, அந்த அறிவிப்பை வெளியிடுமா?

*மாண்புமிகு திரு. க. இராசா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழா ஆரம்ப நிகழ்ச்சியையொட்டி தமிழக அரசு கோவை மாவட்டத்திற்கும், சென்னைக்கும் விடுமுறை விட்டிருக்கிறது. அதுபோலத் தமிழகம் பூராவும் விடுமுறை விடவேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு அவர் தந்த காரணம், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் தமிழகம் முழுவதற்கும் சொந்தமானவர் என்பதுதான். பகுத்தறிவு உலகத்தைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்கள் உலகம் முழுவதற்கும் சொந்தமானவர்; இந்தியா முழுவதற்கும் சொந்தமானவர். அவருடைய நூற்றாண்டு விழா ஆரம்பத்தை யொட்டி அவர் பிறந்த இடத்திலும், அவர் இருந்து அரசியல் செய்த இடத்திலும் விடுமுறை விடப்பட்டிருக்கிறது. இந்த நூற்றாண்டு விழா அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் முடிவடையும் போது, தமிழகம் முழுவதற்கும் விடுமுறை விட வேண்டுமென்று அரசு எண்ணுகிறது.

(2) இராமநாதபுரம் மாவட்டத்தில் பஸ்கள் ஓடாதது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்படி பிரச்சினைகளைக் கிளப்புவதற்கு முன் தலைவரைக் கலந்து கொள்ள வேண்டும். உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் முதலிலே என்னிடம் அனுமதி வாங்கிக்கொண்டார்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, அந்தப் பிரச்சினையில்லை. பேரவையில் கவர்னர் உரை மீதான விவாதம் முடிந்து, ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்கிறார்கள். நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை 42-வது விதியின் கீழே கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி அமைக்கலாமென்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் 15 நாட்களாக பஸ்கள் ஓடவில்லை. தாங்கள் கூட எட்டையாபுரத்திற்கு